**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No :STC 1242/2025**

**Prosecution witness : அ.சா.1** **Date : 16.03.2026.**

| | |
|---|---|
| **Name : ராஜா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கூணாண்டியூரில் குடியிருந்து விவசாயம் செய்கிறேன். என் தாயார் தாயம்மாள் என்பவர் வயோதிகம் காரணமாக கார்த்திகை மாதம் 4ம் தேதி 2021ம் வருடம் இறந்துபோய்விட்டார். கடந்த 2018ம் வருடம் காலை நேரத்தில் நிலம் சம்மந்தமாக பேசிக் கொண்டிருந்த சமயத்தில் கூட்டம் கூடியது. கூட்டத்தில் யாரோ என்னை தள்ளிவிட்டதில் எனக்கு காயம் ஏற்பட்டது. தடுக்க வந்த என் தாயாரை தள்ளிவிட்டதில் அவருக்கும் காயம் ஏற்பட்டது. பிறகு நான் மருத்துவமனைக்கு சென்றேன். சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்துவிட்டேன். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை எதிரிகளின் மீது இருந்த சந்தேகத்தின் பேரில் சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

செய்யப்படுகிறார்.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

2) என் தாயாரின் விருப்பப்படி என் பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதப்பட்டிருந்ததை எனது அண்ணன் ரத்தினம் என்பவர் தகராறு செய்தார் என்றால் நினைவில்லை. பிறகு எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் நினைவில்லை. கடந்த 18.03.2018 ம் தேதி காலை 8 மணிக்கு நான் வீட்டு வாசலில் நின்றிருந்த போது என் அண்ணன் ரத்தினம் அவரது மகன்கள் சுப்பிரமணி மற்றும் மணி, சின்னப்பாப்பா ஆகியோர் என்னை கெட்ட வார்த்தையால் பேசினார்களா என்றால் இல்லை. எதிரிகள் எனது வயிறு, கால் முட்டி ஆகிய பகுதியில் அடித்தார்களா என்றால்இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. நானும், எதிரியும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.17 11:24:18 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No :STC 1242/2025**

**Prosecution witness : அ.சா.2** **Date : 16.03.2026.**

| | |
|---|---|
| **Name : செல்வி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் மேச்சேரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் புலன் ஆய்வு செய்த புலனாய்வு அதிகாரி திரு.சரவணன், காவல் உதவி ஆய்வாளர் தக்க சமயத்தில் சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தால் அவர் சார்பாக ஆவணத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 01.04.2018 –ம் தேதி மேச்சேரி காவல்நிலையத்தில் திரு.சரவணன், காவல் உதவி ஆய்வாளர் நிலையப் பொறுப்பில் இருந்த போது, ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த ராஜா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.150/2018 u/Sec. 294(பி), 323, 506(1) IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.3** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 4** ஆகும்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 02.04.2018 ம் தேதி காலை 9 மணிக்கு சம்பவ இடம் வாதி ராஜா வீட்டருகில் சென்று சாட்சிகள் மாரியப்பன் மற்றும் கோவிந்தன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர்

மற்றும் வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 5** மற்றும் **அ.சா.ஆ 6** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் ராஜா, தாயம்மாள், பரமசிவம், அர்த்தனாரி, பிரகாஷ், மாரிமுத்து, கோவிந்தன், மருத்துவர் சரவணன் மற்றும் ரம்யா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயமடைந்த ராஜா மற்றும் தாயம்மாள் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரம்யா மற்றும் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றார். ராஜா மற்றும் தாயம்மாள் விபத்து பதிவேடு **அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8** ஆகும்.

5. இவ்வழக்கின் எதிரிகள் கடந்த 21.04.2018 ம் தேதி ஆகியோர் கைது செய்யப்பட்டு நிலைய பிணையவில் விடுவித்தார்கள்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 09.07.2018 ம் தேதி **நி.கு.எண்.150/2018 u/Sec. 294(பி), 323, 506(1) IPC லிருந்து u/Sec. 294(பி), 323, IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்குக்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.17 11:24:27 +0530

Judicial Magistrate No.II,
Mettur.